## Deposition of Witness

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**In the Court of Judicial Magistrate No.III Cuddalore.**

| | |
|---|---|
| Case Number | : STC.No.485 /2014 |
| Police Station | : Thiruppapuliyur P.S |
| Deposition of witness for Prosecution | : LW12 / PW11 |
| Name | : Baskaran(SI) |
| Father Name/Husband Name | : Boopalan |
| Address | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 விதிமுறைகளின் படி 27.11.2023 நாளாகிய இன்று திரு. ஜி. இரகோத்தமன், M.A.,L.L.M., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>**முதன்மை விசாரணை:**</u>

1. நான் தற்பொழுது விழுப்புரம் மாவட்டம் காணை காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு கடந்த 15.02.2013 அன்று திருப்பாபுலியூர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, தலைமை காவலர் 2059 அருண்பிரகாசம் என்பவர் திருப்பாபுலியூர் காவல்நிலைய குற்ற எண். 859/2012 வழக்கின் முதல்கட்ட விசாரணையை முடித்து மேல்விசாரணைக்காக என் பார்வைக்கு வைத்த வழக்கினை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடத்தை பார்வையிட்டு, சாட்சிகளை விசாரணை செய்ததில் அவர்கள் அனைவரும் தலைமை காவலரிடம் சொன்னததை போலவே என்னிடமும் சொன்னதால் மேற்படி சாட்சிகளின்

வாக்குமூலங்களை நான் தனியாக பதிவு செய்யவில்லை.

2. மேலும் அரசு பேருந்து நடத்துநர், கடலூர் போக்குவரத்து தலைமை பொறியாளரிடம் விசாரித்தேன், அவரும் தலைமை காவலரிடம் சொன்னதை போலவே என்னிடம் சொன்னதால் நான் தனியாக வாக்குமூலங்களை எதுவும் பதிவு செய்யவில்லை.

3. மேலும் இவ்வழக்கின் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.நல்லதம்பி என்பவரை விசாரித்து அவரது வாக்குமூலத்தை பதிவு செய்தேன். மேலும் இவ்வழக்கில் காயம்பட்ட ஆறுமுகம் என்பவர் சுயநினைவுடன் இல்லாததால் அவரிடம் வாக்குமூலத்தை பதிவு செய்யவில்லை. இவ்வழக்கில் காயம்பட்ட ஆறுமுகத்திற்கு சிகிச்சையளித்த மருத்துவர் விஜய் தம்பையா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன், மேலும் அவர் வழங்கிய காயச்சான்றிதழிகளில் செல்வத்திற்கு ஏற்பட்ட காயத்திற்கு சொற்காயம் என்றும், மேலும் ஆறுமுகத்திற்கு ஏற்பபட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கியதால், எனவே இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இ.த.ச.விலிருந்து 279, 338 ஆக பிரிவு மாற்றம் செய்து பிரிவு மாற்று அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். இவ்வழக்கு விசாரணையை முடித்து இ.த.ச.பிரிவுகள் 279, 338-ன் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

2. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரியின் மீது ஒரு தவறுதலான இறுதியறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கான ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்திலேயே தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me Certified that contains a true and correct statement made by the Accused read over and admitted by the / him to the correct.

-Sd-G. Ragothaman, M.A., L.L.M.,
Judicial Magistrate No.III
Cuddalore.